Registered as a News Peper · பக்கங்கள் 4 · விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM · PEOPLES DAILY · மக்கள் தினசரி

நாதம் 02 · திருவள்ளுவர் ஆண்டு 2022 · புரட்டாதி 31 · (17 10 1991) · வியாழக்கிழமை · ஓசை 241

## ஓய்வுபெற்ற அதிபர்களுக்கு இப்படியும் ஒரு நெருக்கடி

இராணுவம் நிலை கொண்டிருக்கும் பகுதிப் பாடசாலைகளில் கடமையாற்றி இளைப்பாறிய அதிபர்கள் தமது சேவைக்காலத்தில் பொருட்கையிருப்பு வேலையைச் செய்து முடிக்காத காரணத்தினால் ஒய்வூதியக் கொடுப்பனவுகளை இதுவரை பெறமுடியாமல் இருப்பதாக சம்பந்தப்பட்ட அதிபர்கள் கவலை தெரிவித்துள்ளனர். யாழ் கல்வித்திணைக்களம் இவ் இளைப்பாறிய அதிபர்கள் கடமையாற்றிய அப்போதைய பாடசாலை அதிபர்களிடம் மேற்கூறிய அதிபர்களின் கணக்கு வழக்குகளைச் சமர்ப்பிக்குமாறும், இவர்களினால் பாடசாலைக்கு ஏதாவது நட்டம் உண்டா எனக்கோரியுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு சர்வதேச செஞ்சிலுவை அலுவலகத்திற்கு

# சிங்களப் பெற்றோர் படை எடுப்பு!

# இராணுவத்தினர் தகவலறிய முயற்சி

(கொழும்பு)

முல்லைத்தீவில் கடந்த 13 ஆம் திகதி இறந்த இராணுவத்தினர் தொகை பாதுகாப்பு வட்டாரங்கள் வெளியிட்டதைவிட அதிகம் என்பதை அறிந்த சிறிலங்கா இராணுவத்தினரின் பெற்றோர்கள் தகவலறிய கொழும்பு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திற்குப் பெருமளவில் செல்வதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 13 ஆம் திகதி முல்லைத்தீவு மூன்றாம் கட்டை இராணுவ முகாமைப் புலிகள் தாக்கி அழித்தபோது 21 இராணுவத்தினருக்குமேல் கொல்லப்பட்டதுடன் எட்டு இராணுவத்தினரின் இறந்த உடல்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டதும் தெரிந்ததே.

இதேவேளை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஐந்து இராணுவத்தினர் மட்டுமே கொல்லப்பட்டதாகத் தெரிவித்திருந்தது.

ஆனால் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகமெனவும் பல

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### சாள்ஸ்

அளம்பில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் நேற்று நண்பகல் நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த சாள்ஸ் (செல்வேந்திரன் சாவகச்சேரி மட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கோயில்களில் தங்கியிருக்க கோரிக்கை

(கொழும்பு)

வடமராட்சி பகுதியில் மக்களை கோயில்களில் அல்லது வீடுகளில் தங்கியிருக்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் 8 இராணுவம் புலிகளால் கைதாம்

(கொழும்பு)

முல்லைத்தீவுமாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்திவரும் சிறிலங்கா இராணுவத்தினரில் எட்டுபேர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இவர்களில் ஒருவர் இராணுவ அதிகாரி எனவும் கொழும்பு பாதுகாப்பு அமைச்சுவட்டாரங்களைமேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி கூறியது.

மேலும் கைது செய்யப்பட்ட எட்டு இராணுவத்தின

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருக்கோணமடுவில் இராணுவ காவலரணை புலிகள் கைப்பற்றினர்

திருக்கோணமடுவின்றஇடத் ரோடு, இராணுவத்திற்கு ...

## தீவகத்தின் பல பகுதிகளில் உலங்குவானூர்தி தாக்கு

(தீவகம்)

சிறிலங்கா விமானப்படையினரது உலங்கு வானூர்திகள் தீவகத்தின் பல்வேறு இடங்களிலும் நேற்று கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டன. நேற்றுக்காலையில் இருந்து மாலைவரை தீவகத்தின் சரவணை, வேலணை, புளியங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இரவோடு இரவாக மக்கள் இடம் பெயர்வு

தீவகப்பகுதிகள் மீது சிறிலங்கா படையினரின் தாக்குதல்கள் தொடர்வதால் அங்கிருந்து பெருந்தொகையான மக்கள் நேற்று இரவோடிரவாக யாழ் நகரப் பகுதியை நோக்கி இடம் பெயர்ந்து வந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமது நடவடிக்கை குறித்து யூ. என். எச். சி. ஆர். மீளாய்வு

## தமிழக மீனவர் மீது

## இராணுவ காவலரணை புலிகள் கைப்பற்றினர்

திருக்கோணமடு என்ற இடத்தில் இதுவரையிருந்த வந்த காவலரணொன்றை நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டனர் எனத் தெரிய வந்துள்ளது. இத்தாக்குதலின் போது இரு இராணுவத்தினரோடு, இராணுவத்திற்கு உதவியாக செயற்பட்ட ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார். விடுதலைப் புலிகள் திடீரெனத் தாக்கி இலகுவில் சாவடியைக் கைப்பற்றியதாக வெரித்தாஸ் வானொலி கூறியது.

## இராணுவத்தின் முயற்சி ஆனையிறவில் முறியடிப்பு

(ஆனையிறவு)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவக் காவல் அரணில் இருந்து நேற்று நண்பகல் முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து இராணுவத்தினர் பின்வாங்கி முகாமிற்குச் சென்றுவிட்டனர். இத்தாக்குதலில் போராளி ஒருவர் வீரமரணமடைந்துள்ளார். இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றி அறிய முடியவில்லை.

## காரைநகர் இராணுவத்தின் முயற்சி முறியடிப்பு

காரைநகரில் இருந்து பொன்னாலை பக்கமாக முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதல் நடாத்தி தடுத்து நிறுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 10.09 மணியளவில் இராணுவத்தினரது இந்த முயற்சியின் போது விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல் நடைபெற்றது. இம்மோதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர்.

## குடியிருப்புக்கள் மீது மணலாற்றில் குண்டுவீச்சு

(முல்லைத்தீவு)

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா விமானப்படையினரின் பொதுமக்கள் குடியிருப்புகள் மீதான குண்டுத் தாக்குதல்கள் தொடர்கின்றன.

கடந்த இரு நாட்களாக செம்மலை, நாயாறு, கொக்குத் தொடுவாய், கருநாட்டான் கேணி, அலம்பில் ஆகிய பகுதிகள் மீது மூன்று குண்டு வீச்சு விமானங்களும் இரு அவ்ரோ விமானங்களும் குண்டுத் தாக்குதலை நடாத்தியதில் பொதுமக்களின் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

# தமது நடவடிக்கை குறித்து யூ. என். எச். சி. ஆர். மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் ஆலயம் இலங்கையில் மேற்கொண்டுவரும் தனது நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வு செய்ய இருக்கின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் ஆலயத்தின் வருடாந்த கூட்டம் நடைபெற இருக்கின்றது. இக்கூட்டத்தில் இந்த ஸ்தாபனம் சிறிலங்காவில் இதுவரை காலமும் மேற்கொண்டு வந்த நடவடிக்கைகள் தொடர்பாக பூரண மீளாய்வு ஒன்றை மேற்கொள்ள இருக்கின்றது.

இம் மீளாய்வு அறிக்கையைப் பொறுத்து இந்த ஸ்தாபனம் சிறிலங்காவில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு சார்க் மாநாட்டிற்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

## 10.000 பொலிசார் சேவையில்

(கொழும்பு)

கொழும்பில் அடுத்தமாதம் 7, 8, 9 ஆம் திகதிகளில் நடைபெற இருக்கும் 'சார்க்' உச்சி மாநாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பத்தாயிரத்திற்கும் அதிகமான பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப் படுவார்கள் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் தலைமையலுவலகத்தில் 'சார்க்' விசேட பிரிவு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இந்தப் பிரிவிற்கு சிரேஷ்ட உதவிப் பொலிஸ்மா அதிபர் சூரியதுங்கா தலைமை வகிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படும் பொலிஸ் படையினர் பல்வேறு பிரிவுகளின் நடவடிக்கைகளை இந்த பிரிவு ஒருங்கிணைக்கும்.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சகல பாதுகாப்பு ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் மாநாட்டின் தலைவர்கள் தங்கவுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களுக்கு சகல பாதுகாப்பு வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அத்துடன் இங்கு அதிநவீன எலக்ரோனிக் உபகரணங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை - இவர்கள் போக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சபாநாயகர் பதவி துறப்பு; இந்தியச் செய்திக்கு மறுப்பு

சபாநாயகர் பதவியை எம். எச். முகமட் இராஜினாமாச் செய்துள்ளார் என்ற 'இந்திய வானொலி' அறிவித்த செய்தியை முகமட் நிராகரித்துள்ளார்.

நேற்று முன்தினம் இந்திய வானொலி கொழும்புச் செய்தியாளர் கறுப்புசாமியை ஆதாரம் காட்டி எம். எச். முகமட் தமது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்ததாக அறிவித்தது.

ஆனால் இச்செய்தியை எம். எச். முகமட் கொழும்பில் கறுப்புசாமியிடம் மறுத்துள்ளார்.

தான் பதவி விலகியதான செய்தி ஆதாரமற்றதென்றும், தாம் சபாநாயகர் பதவியில் தொடர்ந்தும் இருந்து வருவதாகவும் இந்தியச் செய்தியாளர் கறுப்புசாமியிடம் தெரிவித்தார்.

கள் தொடர்வதால் அங்கிருந்து பெருந்தொகையான மக்கள் இடம் பெயர்ந்து வந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர் மீது கச்சதீவிற்கருகில் சூடு

கச்சதீவுக்கருகே இந்திய மீனவர்களின் படகொன்றை சிறிலங்கா கடற்படையினர் சுட்டுள்ளனர் என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இரு பாடசாலைகளில் முகாம் அமைக்க ஏற்பாடு

யாழ். நகரில் உள்ள இரு பாடசாலைகளில் இடம்பெயர்ந்தவர்களை குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், நல்லூர் விக்னேஸ்வரா பாடசாலையிலும் இவர்களை குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி இரு பாடசாலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் வாரத்திற்கான ஏற்பாடுகள் ஆரம்பம்

இவ்வாண்டுக்கான தமிழீழ மாவீரர் வாரத்திற்கான ஆரம்ப ஏற்பாடுகள் யாவும் தமிழீழத்தின் அனைத்துப் பகுதியிலும் ஆரம்பமாகி உள்ளது.

எதிர் வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதி வரை மிகச் சிறப்பாக நடைபெற இருக்கும் இம் மாவீரர் வாரத்திற்கான சகல ஏற்பாடுகளும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் கிராமிய ரீதியாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் மாவட்டத்தில் நவ. 4இல் முன்னோடிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதி யாழ் மாவட்டத்தில் க. பொ. த. சாதாரண முன்னோடிப் பரீட்சை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள கோட்டக் கல்வி அலுவலகங்கள் தேவைப்படும் வினாத்தாள்களின் தொகையினை உடனடியாக கல்வித் திணைக்களத்திற்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து இப்பரீட்சைக்குரிய மாதிரி வினாத்தாள் சமீபத்தில் அனுப்பி வைக்கப்பட்டமை தெரிந்ததே. (தி)

## வரி விளம்பரம்

### ஹோமியோபதி அக்குபங்சர் சிகிச்சை

ஹோமியோபதி அக்குபங்சர் சிகிச்சை கொழும்பு தெற்கு அரசவைத்திய சாலையில் கடமையாற்றும் விரிவுரையாளரினால் நாரிப்பிடிப்பு, மூட்டுவாதம், பாரிசவாதம், அபாலக்குத்து. தோல் வியாதிகள், தொய்வு. நரம்பு தொடர்பான தீராத நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டுவருகின்றது மேலதிக விபரங்களுக்கு 121/2 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 95 யாழ் வீதி மானிப்பாய், திருமதி சத்தியமூர்த்தி புகையிரதநிலையவீதி, செசக்கனில். (R/1847)

### A/L இரசாயனம்

A/L 93 இரசாயனம் சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் 19 சனி 6 30 AM மாலை வகுப்பு 3 P M. கிழமைநாள் வகுப்பு ஆரம்பம் 21 திங்கள் 4.30 P M. திங்கள், புதன் 4 30 P M ஆசிரியர் சதீஸ் 108 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (R/1848)

### தவறி விட்டது

அம்மன் வீதி திருநெல்வேலி பேற்கைச் சேர்ந்த த. சுதிரவேலு என்பவரின் கா சோலைப் புத்தகம் மூக்குச் கண்ணாடி, முக்கிய குறிப்புக் கோவை கொண்ட ஒருகைப்பை நேற்று மாலை இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதி கிளைக்கும் அவரின் வீட்டிற்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில்ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
R/1852

### 93 AL

★விஞ்ஞானபாடங்கள் மட்டும்
ஆரம்பம்
19 - 10 - 1991
(சனி காலை 7 மணி)

## செய்கை பண்ணப்படாத காணிகள் செய்கைக்காக பகிர்ந்தளிக்கப்படும்

கிளிநொச்சி மாவட்டத்தில் பல தரிசுக் காணிகள் இனம் காணப்பட்டுள்ளன. இவற்றுள் காணி அற்ற 800 விவசாயிகளுக்கு உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக தற்காலிகமாக காணிகள் வழங்கப்பட்டுள்ளன மேலும் தரிசுக் காணிகள் இனங்காணப்பட்டு காணி அற்ற விவசாயிகளுக்கு வழங்குவதை கிளிநொச்சி மாவட்ட ஆய்வு நிறுவனம் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. உற்பத்தி செய்யப்படாத தாராளமான காணிகள் தற்போது முழுமையாக உற்பத்திக்குள் ஈடுபட்டுள்ளது.

## தொண்டை அடைப்பான் நோய் பரவுகின்றது

தற்போது வன்னிப்பிராந்தியத்தில் மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய் விரைவாக பரவுகின்றது. இந் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசி மருந்துகளும், தடுப்பூசி போடும் கருவி, ஊசி, ஆகியவற்றை கொண்டுவருவதற்கு சிறிலங்கா இராணுவம் இடைஞ்சல் ஏற்படுத்துகின்றது. இதனால் இந் நோய் பரவுவதை தடைசெய்ய முடியாது உள்ளது. என கால்நடை வைத்தியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தமிழீழ ஆய்வு நிறுவனம்

## மீன் பதனிடலில் புதிய முயற்சி வெற்றி

கடந்த காலத்தில் சூடை மீன் போன்ற சிறிய மீன்வகைகள் பெருமளவு பிடிக்கப்பட்டன. ஆனாலும் உப்புத் தட்டுப்பாடு பெருமளவு காணப்பட்டது இதனால் கருவாடு போடுதல், சந்தைப்படுத்துதல் போன்றன பாதிக்கப்பட்டன. இதற்கு மாற்று நடவடிக்கையாக குறைந்த அளவு உப்பை உபயோகித்து புகையூட்டி பதனிடுதல் பரீட்சார்த்த முயற்சி வெற்றி அளித்துள்ளது இம்முயற்சியை தமிழீழ ஆய்வு நிறுவனமும் யாழ் பல்கலைக்கழக விலங்கியல் பீடமும் மேற்கொண்டது இம்முயற்சியின் பெறுபேறுகள் உற்சாகம் ஊட்டக் கூடியதாக அமைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து புகையூட்டல் முறையை கைத்தொழில் நடவடிக்கையாக விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன

## கால் நடை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

கிளிநொச்சி மாவட்ட ஆய்வு நிறுவனப் பிரிவின் முயற்சியினால் கால்நடைகள் பெருமளவு கட்டு படுத்தப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகள் பெரிதும் நன்மை அடைந்துள்ளார்கள் விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளது இந் நல முறையினால் விவசாயிகள் மத்தியில் விவசாய செய்கையில் நம்பிக்கைத் தெம்பு ஏற்பட்டுள்ளது இது மேலும் விவசாய உற்பத்தி அதிகரிக்க வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## விஜயதசமி விழா அழைப்பு

இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி

காலம்: 17-10-1991 இன்று மாலை 2மணிக்கு கலை நிகழ்வுகளாக இயல், இசை, நாடகம் போன்றன இடம் பெறும்.

சிறப்பு நிகழ்வாக:- "வழக்காடு மன்றம்" குற்றவாளிக் கூண்டில் யாழ்ப்பாணத்தவர்

குற்றப்பத்திரிகை:- எமது சமுதாய மாற்றங்களுக்கு யாழ்ப்பாணத் தமிழர்களே தடையாக இருந்து வருகின்றனர்.

| தொடுப்போர்:- | மறுப்போர்:- |
|---|---|
| பொன் பிரதாபன் | த. சண்முகராஜ் |
| ப. ஜெயராகவன் | ச. சசிகுமார் |
| ச. சத்தியராணி | ந. சறோஜினி |

நீதிபதி:- சுடர் மகேந்திரன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
(B/3342)

## யாழ். ஸ்ரீதர் திரையரங்கில்

# மாங்குளம் தகர்ப்பு

[விவரணப்படம்]

# இனியொரு விதி

[குறும்படம்]

ஆகியன அரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றன.

தினசரி ஒரு காட்சியும் (4 மணிக்கும்) சனி, ஞாயிறுகளில் இரண்டு காட்சிகளும் (4, 6 மணிக்கும்) காண்பிக்கப்படும்.
[B/3203]

## 4 ஆம் ஆண்டு நினைவு நாள்



## சாவகச்சேரியியல் ஐங்கரநேசனின் யூனிவேர்சல்

கந்தர்மடம் ———— யாழ்ப்பாணம்

# நினைவு கூருகின்றோம்...

**1991 - 10 - 17**

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் தம்பிலுவில் பகுதியில் இந்தியப்படையினருடனான மோதலில் காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய
**நந்தன்** (செ. குலசிங்கம் - காரைதீவு)

சண்டிலிப்பாய்ப் பகுதியில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமாணமெய்திய
**கப்டன் கனகசபை** (ஆறுமுகம் பாக்கியராசா - சித்தன்கேணி)

கல்லுண்டாய் வெளியில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
**தென்றல்/கோணேஷ்** (வல்விபுரம் கணேஸ்வரன் - மாவிட்டபுரம்)

கோப்பாயில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
**லெப். இளங்கோ** (மார்க்கண்டு சோதிலிங்கம் - காரைநகர்)

மல்லாகம், கோப்பாய்ப் பகுதிகளில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 2 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
**சசி** (பொ. சசிகரன் - பெரியகல்லாறு)

வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, இலுப்பையடிச் சந்திப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரமரணமெய்திய சித்தன்கேணிப் பிரதேசப் பொறுப்பாளர்
**லெப். அருண்/பிறேம்** (நடராசா பிறேமச்சந்திரன் - மானிப்பாய்)

அம்பாறை, மஞ்சளஓயாப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 சிறுவர்கள் உட்பட 5 தமிழர்கள்

இளவாலையில் சிற்றூர்தி ஒன்றில் வைத்து இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு, முகாமில் கொலை

**93 AL**

★ விஞ்ஞானபாடங்கள் மட்டும்

ஆரம்பம்

19 - 10 - 1991

(சனி காலை 7 மணி)

★ எமது வழமையான ஆசிரியர் குழுவினால்

★ மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்கள் இடத்தை உறுதி செய்து கொள்ளவும்.

**NEW MASTER INSTITUTE**

*Jaffna*

(B-3280)

முயற்சியினால் கால்நடைகள் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகள் பெரிதும் நன்மை அடைந்துள்ளார்கள் விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளது இந் நல முறையினால் விவசாயிகள் மத்தியில் விவசாய செய்கையில் நம்பிக்கைத் தென்பு ஏற்பட்டுள்ளது இது மேலும் விவசாய உற்பத்தி அதிகரிக்க வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழீழ ஆய்வு நிறுவனம்

## மரக்கறி வித்துக்கள்

கிளிநொச்சி மாவட்ட ஆய்வு நிறுவனப் பிரிவின் முயற்சியால் மரக்கறி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன இவற்றுள் புடோல், பாகல், குரங்கு வால் பயிற்றை புசிட்டா, கத்தரி, வெண்டிபோன்ற வித்துக்கள் அடங்கும். இவ்வித்துக்களை பெறவிரும்புவோர் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் விற்பனையாகும் இவ்வித்துக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழீழ ஆய்வு நிறுவனம்

(B/3335)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(கலை வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)

**93 ஆரம்பம்: 19.10.91** 8.00 மணி

எமது தனித்துவமான ஆசிரியர் குழு

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் | : திரு. க. கலாகரன் | இந்து நாகரிகம் | | திரு. காரை |
| வர்த்தகம் | : திரு. தேவா | இந்துசமயம் | | சுந்தரம்பிள்ளை |
| கணக்கியல் | : திரு. வன்னியசிங்கம் | தமிழ் | : | திரு. குழந்தை |
| அளவையியல் | : திரு. சுப்பிரமணியம் | புவியியல் | : | திரு. குணராசா |
| சரித்திரம் | : திரு. விஜயன் | அரசியல் | : | திரு. சீலன் |

குறிப்பு:

★ அனுமதிகளை முன்கூட்டிப் பெறவும். முதல் 100 மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படும்.

★ 93 ஆண்டு A/L எமது நிறுவனத்தில் கற்கும் மாணவர்களுக்கு O/L இலவச விசேட வகுப்புக்களும் நடத்தப்படும்.

3262)



## கப்டன் கனகசபை

(ஆறுமுகம் பாக்கியராஜா)

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 29 - 01 - 1967 | 17 - 10 - 1987 |

இந்திய இராணுவத்துடன் சண்டிலிப்பாயில் நடந்த நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.

ஈழத்தாயின் துயர் துடைக்க புறப்பட்ட மாவீரனே இந்த மண் எங்களின் சொந்த மண் என தாகம் கொண்டாய்! அமைதியென கூறி வந்த நயவஞ்சகருடன் மோதியே மார்பிலே குண்டை ஏந்தினாயே. நான்கு ஆண்டுகள் சென்றாலும் உனது வீரசாதனையும் பாசமும் எம்மை விட்டகலாதே.

கனகசபை வீதி, சித்தன்கேணி.

சங்கானை மேற்கு சிற்றூரவை சித்தன்கேணி மக்கள்.

(B/3325)

- மானிப்பாய்)

அம்பாறை, மகிழோயாப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 சிறுவர்கள் உட்பட 5 தமிழர்கள்

இளவாலையில் சிற்றூர்தி ஒன்றில் வைத்து இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு, முகாமில் கொலை செய்யப்பட்ட மாரீசன் கூடலைச் சேர்ந்த தமிழ் இளைஞன்

1989ஆம் ஆண்டு வீரமரணமெய்திய

**நிரு** (சிவப்பிரகாசம் வைகுந்தநாதன் - புலோப்பளை)

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவுப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எம்மைப்பிரிந்த

**பானு** (அருளம்பலம் ரவிச்சந்திரன்)

பலாலி முகாமைச் சூழ்ந்த பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட ஒப்பறேஷன் ஜெயசக்தி நடவடிக்கையின் போது வசாவிளான் பகுதியில் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

**விக்ரர்** (கமலமுத்து பத்மநாதன் - உடப்பு, புத்தளம்)

**லெப்.ராசிக்** (சிறிபாலசுப்பிரமணியம் அன்பழகன் - நெல்லண்டை, பருத்தித்துறை)

**லெப்.செல்வம்** (சிவப்பிரகாசம் ரமேஷ்குமார் - பண்டாரி அம்மன் கோயிலடி, பருத்தித்துறை)

**2ஆம்லெப்.ஐயர்** (பாலசுப்பிரமணியசர்மா சுந்தர ராஜசர்மா - புத்தூர் மேற்கு)

**செல்டன்** (யேசுதாஸ் அன்ரனியுனைற்-நாவாந்துறை)

**நசார்** (விஜயரட்ணம் சுதாகர்-பிள்ளையார்கோயிலடி, பெரியவிளான், இளவாலை)

**லெப்.டானியல்** (கிருஷ்ணபிள்ளை நகுலேஸ்வரன் - மூளாய் மேற்கு, சுழிபுரம்)

பலாலி முகாமிலிருந்து சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட மற்றும் படுகாயமுற்ற நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மரணமடைந்த 2 தமிழர்கள்

வவுனியாவில் சிறிலங்காப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து அடித்துக்கொல்லப்பட்ட வவுனியா, கந்தசாமி கோயிலடியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B 3337)

### ※ சிந்தனைக்கு ※

அடக்கப்படுபவர்கள் அதற்குப் பணிந்து செல்லும் போது தான், ஆதிக்கம் வலுப்பெறுகிறது என்றஇரகசியத்தை ஒவ்வொருவரும் அறியவேண்டும்

— மகாத்மா காந்தி


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 17-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## இன அழிப்பில் புது வடிவங்கள்

புனரமைப்பு நடவடிக்கைகளின் நிறுத்தம், புனர்வாழ்வு நடவடிக்கைகளில் கட்டுப்பாடு என்பனவற்றின் மூலம் சிறிலங்கா அரசாங்கம் தமிழர் மீதான இன ஒடுக்கலினை தீவிரப்படுத்தியுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளினாலும், பொருளாதார எரிபொருள் தடையினாலும் அல்லலுறும் மக்களை மேலும் இன்னலுக்கு உள்ளாக்கும் நோக்கிலேயே புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளில் கட்டுப்பாட்டையும், தடைகளையும் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் அண்மைக்கால தீர்மானத்தின்படி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் புனரமைப்பு நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்பட்டுள்ளன. இதன் பிரகாரம், இராணுவத்தினரின் தாக்குதலுக்கும், குண்டுவீச்சிற்கும் இலக்காகி அழிவுற்ற கட்டடங்கள் உட்பட ஏனைய அழிவுகளை அப்புறப்படுத்துவதற்கான அனுமதிகளும் அரச அதிகாரிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது இதன் மூலம் பொருளாதாரத் தடையையும், பணச் சுற்றோட்டத்தையும் மேலும் தீவிரமடையச் செய்வதோடு, சூழல் மாசடைதலையும் ஏற்படுத்தி பெரும் நெருக்கடிகளையும், சுகாதாரச் சீர்கேட்டையும் தோற்றுவித்து பெரும் அழிவுகளை ஏற்படுத்த சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தனியாக இராணுவ நடவடிக்கையினால் தமிழர் போராட்டத்தை வெற்றி காண முடியாது என்ற நிலையிலேயே சிறிலங்கா அரசாங்கம் அத்துடன் பொருளாதாரத் தடையையும், தற்போதைய புதிய கட்டுப்பாடுகளையும் இணைத்துக் கொண்டுள்ளது.

### தமிழீழ விடுதலைப் போரில்

## புதிய அத்தியாயம் ஒன்றை உருவாக்கியவர் விக்ரர்

(மன்னார்)

இன்று உலகில் விடுதலைப் புலிகளின் போர்முறையை அதிகமாகப் பேசுகிறார்கள். அதில் தளபதி விக்ரர் ஒஸ்கா ஓர் புதிய அத்தியாயத்தை உருவாக்கியவர் ஆவார்.

சிங்கள இனவெறி இராணுவத்தை கைதுசெய்து வரலாறு படைத்தவர் அவர். இவ்வாறு மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சுரேஸ் கூறினார். தமிழீழமண்ணின் எல்லைப் புறமான பெரிய குஞ்சுக்குளம் என்னும் இடத்தில் நடைபெற்ற மன்னார் மாவட்ட முன்னாள் தளபதி விக்ரர் ஒஸ்கா, 2 ஆவது லெப் றோம் ஆகியோரின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினக் கூட்டத்தில் பேசும் போது திரு சுரேஸ் மேலும், நான் உயிருடன் இருக்கும் வரை எமது மண்ணில், அந்நியர் காலடிபட இடம் கொடுக்க மாட்டேன் என்று கூறி இறுதிவரை இதற்காக போராடியவர் என்றும் குறிப்பிட்டார்.

மன்னார் மாவட்ட கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் வாசுதேவன், தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், விடுதலைப் புலிகள், மக்கள் முன்னணியின் தலைமைச்செயலக உறுப்பினர் திரு. தினேஸ், யாழ் மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. நாவண்ணன் மகளிர் முன்னணி, உறுப்பினர் குவேனி, மடுப்பிரதேச அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளையவன் ஆகியோரும் உரையாற்றினர்.

### அமெரிக்கா பட்டினி யுத்தத்தை

## ஆரம்பித்துள்ளதாக ஈராக் குற்றச்சாட்டு

[பாக்தாத்]

ஈராக் மீது அமெரிக்கஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் பட்டினி யுத்தத்தை ஆரம்பித்துள்ளார் என ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில்குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஈராக்கிய மக்களுடன் உறவுகளை சுமுகப்படுத்த சதாம் ஹுசையின் அதிகாரத்திலிருந்து நீங்க வேண்டும் என்றும் இதுவே தனது கொள்கை என்றும் தெரிவித்தார்.

இதனை மறுத்தே ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

மேலும் அக்கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது: புஷ்ஷின் கருத்து அசாதாரணமானது. அபாயகரமானது ஒருசுதந்திர நாட்டின் உள் விவகாரத்தில் தலையீடு செய்வதாக அது உள்ளது.

அமெரிக்காவின் தர்மகர்த்தா பொறுப்பின் கீழ் ஈராக்கை கொண்டுவர அதன் உள்நாட்டு விவகாரத்தில் தலையீடுசெய்ய புஷ்நிர்ப்பந்தித்து வருகின்றார் அதன்மீது சந்தேகமான கொள்கையை கடைப்பிடித்து வருகின்றார். பட்டினி போட்டு மரணத்தை உண்டு பண்ண முயற்சிக்கின்றார் என்றும் கடிதத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## தமி. மீனவர்மீது தாக்குதல்; கடற்படைத்தளபதி மறுப்பு

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்தும்

## மாவீரர் தினப் போட்டிகள்

21-11-91 தொடக்கம் 27-11-91 வரையில் நடைபெற இருக்கும் மாவீரர் தினத்தை ஒட்டி நடாத்தப்பட இருக்கும் கலைகலாசாரப் போட்டிகளில் எழுத்தாளர்கள் கலைஞர்கள் மற்றும் இத்துறையில் ஆர்வம் மிக்கோர் மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி, மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இப் போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெற உள்ளன.

1. கட்டுரை 2. நாவல் 3. சிறுகதை
4. கவிதை 5. சுவரொட்டி

இவற்றை ஆக்க விரும்புவோர் ஆக்கங்களை 25-10-91 க்கு முன்பு எமது பிரதேச மாவட்ட காரியாலயங்களிலும் அல்லது பத்திரிகைக் காரியாலயங்களில் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றோம்.

★ போட்டிகள் அனைத்தும் மாணவர்களுக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறும்.

★ தமிழீழத்தில் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ள இப் போட்டிகளில் ஆர்வம் ஆற்றல் மிக்க அனைவரும் கலந்துகொள்ளலாம்.

**போட்டிகளுக்கான விதிமுறைகள்**

தமிழீழ மக்கள் அனைவரும் கலந்து கொள்ளக் கூடிய இப்போட்டிகளில் படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப்போரை அடிப்படையாகக் கொண்டும் அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும் / சமகாலத்தில் எமது மக்களின் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட யதார்த்த தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண் மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த மாவீரர்களின் உணர்வுகளையும் இதயதாகத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதே போல் சுவரொட்டிகளின் கருப்பொருள்கள் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் நன்று. இலக்கியப் படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்.

சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்கு குறையாமலும் கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். சுவரொட்டிகள் யாவும் ஆட்போட்டில் 60 சென்ரிமீற்றர் X 40 சென்ரி மீற்றர் அளவு கொண்டதாக வண்ணப் படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகிக்கலாம்.) கறுப்பு வெள்ளைப் படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.

தனியாக இராணுவ நடவடிக்கையினால் தமிழர் போராட்டத்தை வெற்றி காண முடியாது என்ற நிலையிலேயே சிறிலங்கா அரசாங்கம் அத்துடன் பொருளாதாரத் தடைகளையும், தற்போதைய புதிய கட்டுப்பாடுகளையும் இணைத்துக் கொண்டுள்ளது.

சிறிலங்காவின் புதிய திட்டத்தின்படி புனரமைப்பு நடவடிக்கைகள் மட்டும் நிறுத்தப்படவில்லை. புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கும் பெரும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது புதிய அகதி முகாம் ஒன்றை அமைப்பதானாலும் சிறிலங்கா அரசாங்கத்தின் அனுமதியை பெறவேண்டும் என யாழ். செயலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது இராணுவ நடவடிக்கையின் இடம் பெயர்ந்து வீடு, உடைமைகளை இழந்து அல்லலுற்று வெளியேறும் மக்களை உடன் ஒரு பொது இடத்தில் தங்கவைப்பதற்கும் அவர்களுக்கு உணவு விநியோகிக்கவும் அனுமதி பெற வேண்டும் என்ற அவல நிலையும் உருவாகியுள்ளது.

அதேவேளை, நிவாரணத்திற்கென சிறிலங்கா அரசாங்கம் அனுப்பிவைத்துள்ள அத்தியாவசியப் பொருள்கள் பழுதடைந்தவைகளாகவும், பாவனைக்கு உகந்தவையாக இல்லாததோடு, சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்க கூடியவையாகவும், உயிராபத்தை ஏற்படுத்தக் கூடியவையாகவும் உள்ளன.

இவ்வாறு இனரீதியாக சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டு வரும் ஒடுக்குமுறை நடவடிக்கைகள் சர்வதேச நிறுவனங்களின் செயற்பாடுகளையும் பெரியளவில் பாதிப்புறச் செய்துள்ளன. இராணுவ நடவடிக்கையால் அல்லலுறும் மக்களின் புனர்வாழ்வில் அக்கறை கொண்டு இயங்கும் சில நிறுவனங்கள் சிறிலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கையால், தமது எதிர்கால நடவடிக்கை பற்றி மீளாய்வு செய்ய வேண்டிய நிலையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளன. அகதிகளை முகாம்களிலேயே நிரந்தரமாக முடக்கி வைக்கும் சிறிலங்காவின் முடிவுகள் அவர்களை ஆச்சரியமடைய வைத்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்தின் இனவாத நடவடிக்கை இன்று நேற்று உருவானதல்ல. அதேவேளை, அதன் ஒடுக்குமுறையும் மாற்றங்கள் கொண்டதல்ல. காலத்திற்குக் காலம் இனவாதிகள் அறிமுகப்படுத்திய ஒடுக்குமுறை வடிவங்களை தமிழர் உடைத்தெறியும்போது புதுவடிவங்களை ஒடுக்குமுறையாளர்கள் தனியாகவும் கூட்டாகவும் பயன்படுத்த முயல்கின்றனர். இந்த ஒடுக்குமுறைகளை உடைத்தெறிவதற்கு இனவாதிகளிடம் சரணடைவதனாலோ அன்றி பேரம் பேசுவதினாலோ நாம் நீக்கிவிடமுடியாது ஒடுக்குமுறையை உடைத்தெறிய மேலும், திரத்துடன் போராடுவதே ஒரேவழி.

ஐ. நா. பாதுகாப்பு சபைக்கு கடிதம் ஒன்றை எழுதியுள் ளார் என்றும் சடிதத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## தமி. மீனவர்மீது தாக்குதல்; கடற்படைத்தளபதி மறுப்பு

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குவதாகக் கூறப்படும் குற்றச் சாட்டுகளை இலங்கைக் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ மறுத்துள்ளார். செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் நிதானத்துடன் நடந்து கொள்ளுமாறு கடற்படை கமாண்டர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அண்மையில் கச்சதீவுக்கு அருகே இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டு கடலில் தூக்கி வீசப்பட்டமை தொடர்பாக இந்திய அரசு செய்திருந்த புகார்களுக்கு பதிலளிக்குமுகமாக கடற்படைத்தளபதி இவ்வாறு கூறியுள்ளார் எனத் தெரிகிறது.

## ரஜீவ் கொலைதொடர்பாக லொறி உரிமையாளர் கைது

ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தொடர்பாக மேட்டூரைச்சேர்ந்த லொறி உரிமையாளர்ஒருவர் கடந்த திங்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகச் சென்னைப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ராஜி என்றழைக்கப்படும் தனசேகர் என்பவர் சிவராசனும், சுபாவும் பெங்களூருக்குத் தப்பிச்செல்ல உதவினார் என்றும், விடுதலைப் புலிகளிடம் பணம் பெற்று வாகனங்களை இவர் வாங்கினார் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

## அத்தியாவசியப் பொருள்களை களஞ்சியம் இன்மையால் பாதுகாப்பதில் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பான களஞ்சியசாலைகள் குறைவாக இருப்பதனால் வந்து சேரும் குறைந்தளவிலான உணவுப் பொருள்களைக் கூட களஞ்சியப்படுத்த முடியாமலிருப்பதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது பருத்தித்துறையில் உள்ள இரு சினிமா கொட்டகைகள் களஞ்சிய சாலையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்றுதெரிவித்த அவர், காங்கேசன் துறை, குருநகர் போன்ற இடங்களில் உள்ள உணவுக் களஞ்சிய சாலைகள் சேதமடைந்திருப்பதைச் சுட்டிக் காட்டினார்.

மழை காலத்தில் உணவுப் பொருள்களை களஞ்சியப் படுத்துவதில் பெரு நெருக்கடியை தாம் எதிர்கொள்வதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (தி)

கள் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். சுவரொட்டிகள் யாவும் ஆட்போட்டில் 60 சென்ரி மீற்றர் X 40 சென்ரி மீற்றர் அளவு கொண்டதாக வண்ணப் படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகிக்கலாம்.) கறுப்பு வெள்ளைப் படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்களது படைப்புக்கள் அவர்களது பாடசாலை அதிபர்களால் அல்லது வகுப்பு ஆசிரியர்களால் அவர்களுடைய சொந்தப் படைப்பு என உறுதிப்படுத்தப்பட வேண்டும். போட்டிக்கான கட்டுரைகள் 3000 - 5000 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் நன்று போட்டிகளின் தீர்ப்பு தகுதி வாய்ந்த நடுவர் குழுவினால் எடுக்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

## மாணவர்களே!
## போட்டிகள் பற்றிய சிறப்பு விதிகள்

மாணவர்களுக்கான போட்டிகள், சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் ஆகிய விடயங்களில் நடைபெறும். இவை மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டதாக இருக்கும் ஓவியங்கள் 18X12 அளவு கொண்டதாக இருக்க வேண்டும். கட்டுரைகள் கீழ்வரும் அம்சங்களைக்கொண்டதாக இருக்க வேண்டும்

1. விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்
2. தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி
3. தமிழீழ மாணவர்களது கல்வியின் எதிர்காலம்
4. இன்றைய சூழ்நிலையில் மாணவர்களது சமூகப்பணிகள்
5. போராடுவதற்காகக் கற்போம்.

மேற்கண்ட தலைப்புகளில் கட்டுரைகள் 2,500 சொற்களுக்கு மேற்படாமல் வரைய வேண்டும் மாணவர்களுக்கான போட்டிகள் யாவும் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு ஆகிய பிரிவுகளாக நடைபெறும்.

1. 15 வயதுக்கு உட்பட்டோர் கீழ்ப்பிரிவு
2. 15 — 17 வயதுக்கு இடைப்பட்டோர் மத்திய பிரிவு
3. 17 வயதுக்கு மேற்பட்டோர் மேற்பிரிவு

**ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்**

வடமாகாண
இணைக்கப்பட்ட
பல்கலைக்கழகக்
கல்லூரி வவுனியா

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சார்பில் விண்ணப்பங்கள் 1991 ஒக்டோபர் 31 ஆம் தேதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

கணிதவிஞ்ஞான (Mathenatical Scie ce) பல்கலைக்கழகக் கல்லூரி விரிவுரையாளர் / பல்கலைக்கழகக் கல்லூரி விரிவுரையாளர் (தகுதிகாண்)

தகைமைகள்:

1) கணிதம் அல்லது புள்ளிவிபரவியல் சிறப்புப்பட்டத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு

அல்லது

2) கணிதம் அல்லது புள்ளிவிபரவியல் பாடங்களிலொன்றுடன் பொதுப்பட்டத்தில் சிறப்புச்சித்தி

அல்லது

3) உரிய கல்வி நிறுவனத்தின் சிபாரிசின் படி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளக்கூடிய இதர தகைமைகள்

சம்பள அளவுத் திட்டம்

பல்கலைக் கழகக் கல்லூரி விரிவுரையாளர் (தகுதிகாண்) ரூபா 3900-06x 100- 4500 (மாதமொன்றுக்கு) பல்கலைக் கழகக் கல்லூரி விரிவுரையாளர் ரூபா 4500-16x200 - 7700 (மாதமொன்றுக்கு)

மேற் குறித்த தகைமைகளுடன் அவ்விவிக்கப் ...

# யூக்கோவில் போர் நிறுத்தம்
# சோவியத் முயற்சி வெற்றி?

(மொஸ்கோ)

யூகோஸ்லாவியாவில் போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்குச் சோவியத் யூனியன் மேற்கொண்ட முயற்சி பலனளித்துள்ளதென்று சோவியத் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

கொர்பச்சேவின் அழைப்பை ஏற்று நேற்று முன்தினம் மொஸ்கோ வந்த குரோஷியா அதிபரும், செர்பியாவின் அதிபரும் யூகோஸ்லாவியாவில் போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவரச் சம்மதித்துள்ளதுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டுள்ளனர்

இந்தப் புதிய ஒப்பந்தத்தின் மூலம் யூகோஸ்லாவியா முழுவதும் போர் நிறுத்தம் உடனடியாக அமுலுக்கு வருகின்றது என்று சோவியத் அதிகாரி தெரிவித்தார்.

## அயோத்தியில் நிலத்தை கையகப்படுத்தவில்லை
### உத்தரப்பிரதேச அரசு அறிவிப்பு

(டில்லி)

அயோத்தியில் பிரச்சினைக்குரிய இடத்தை தாம் கையகப்படுத்தவில்லை என்று உத்தரப்பிரதேச அரசு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கேட்டுக் கொண்டபடி அறிக்கையொன்றை சமர்ப்பித்த உத்தரப் பிரதேச மாநில அரசு தாம் இந்த அறிக்கையை வெளியிடுவதற்கு முன்னர் எல்லா சட்ட அம்சங்களும் ஆராயப்பட்டன என்று தெரிவித்துள்ளது

ஆனால் இது குறித்து மேலும் விளக்கம் அளிக்கும் படி மத்திய உள்துறை அமைச்சு உத்தரப் பிரதேச அரசாங்கத்தை கேட்டுள்ளது

முல்லையில்

...ன் கதி என்ன என்பது பற்றித் தெரிய வரவில்லை எனக் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளதாகவும் மேலும் அச்செய்தி தெரிவித்தது

தமிழக

நேற்று முன்தினம் அதிகாலை சிறிலங்கா கடற்படை சுட்டதில் அப்படகு சேதமுற்றதாகவும். ஆனால் சேதமுற்ற படகில் மீனவர்கள் அனைவரும் தப்பிவிட்டதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாவீரர்

இதற்காக அனைத்துப்பகுதியிலும் உள்ள சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், சிற்றூர் அவைகள், மற்றும் வெகுஜன ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் கிராம மட்டத்திலான குழுக்கள் உருவாக்கப்பட இருக்கின்றன. இக்குழுக்கள் மாவீரர் வாரத்தில் முக்கிய பல பணிகளை ஒழுங்கு செய்து நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாக இருந்து செயலாற்றும்.

தாயக விடுதலைக்காகப் போராடி வீரமரணமடைந்த 3500 மாவீரர்களின் நினைவாகவும், தமிழீழத் தேசிய தினமாகவும் அனுஷ்டிக்கப்படும். இம் மாவீரர் வாரம் ...

தமது

நடவடிக்கைகள் பற்றியும், செயற்படுத்தப்பட வேண்டிய செயற்திட்டங்கள் பற்றியும் தீர்மானிக்க இருக்கின்றது.

இந்த ஸ்தாபனத்தின் விதிமுறைகளின்படி வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வுத் திட்டம் மீளக்குடியமர்த்தும் திட்டம் போன்றவற்றை, நடைமுறைப்படுத்துவதிலேயே இந்த ஸ்தாபனம் அதிகளவு அக்கறையாக இருக்க வேண் ...

## வழுக்கையாறு துப்பரவு செய்யப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள வழுக்கை ஆறு துப்பரவு செய்யப்பட்டு வருகின்றது

வழுக்கையாற்றின் பிரதான வாய்க்காலின் இருபக்கமும் உள்ள அணைக்கட்டுக்கள் புனரமைக்கப்படுவதுடன் வாய்க்காலின் உட்புறமும் துப்பரவாக்கப்பட்டு வருகின்றது. இத்துடன் இந்த ஆற்றின் கிளை வாய்க்கால்களும் புனரமைக்கப்பட்டு துப்பரவு செய்யப்படுவதோடு இந்த ஆற்றுக்கு குறுக்காக உள்ள மதகுகளும் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றன. (க)

வீரவணக்கம்

டுவிச்) என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார் இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

கோயில்களில்

மாறு சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி சிறிலங்கா வானொலி நேற்றிரவு அறிவித்தது.

கொழும்பு

வரத்துச் செய்யும் போதும் உரிய பாதுகாப்பு வழங்கப்படுமென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

இரவோடு

கொண்டிருந்தனர்.

புங்குடுதீவு, வேலணை, ஆகிய பகுதிகளில் இருந்து நேற்று நள்ளிரவுக்குப் பின்னரும் பண்ணைப்பாலம் வழியாக யாழ் நகரை நோக்கி வந்த மக்கள் நகரின் சட்டங் ...

குவைத்திலிருந்து

## இலங்கை திரும்பியோருக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு

(கொழும்பு)

குவைத்தில் இருந்து வளைகுடா போரினால் இலங்கை திரும்பியவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்படும் என தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது

சுவிஸ் அரசாங்கம், ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் உதவியுடன் சர்வதேச தொழில் ஸ்தாபனம் 15 லட்சம் டொலர் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது என்றும்,

இத்திட்டத்தின்கீழ் மத்திய கிழக்கில் இருந்து வளைகுடா நெருக்கடி காரணமாக இலங்கை திரும்பிய 25,000 தொழிலாளர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் நோக்கமாக ஒரு லட்சம் ரூபா வழங்கப்படும் என்றும்.

ஆனால் இத்தொகை யூலை மாதம் அளவில் தான் நடைமுறைக்கு வரும் என்றும் தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

## வவுனியாவிற்கு புனர்வாழ்வு அமைச்சர்

(கொழும்பு)

புனர்வாழ்வு அமைச்சர் தயாரத்தினா நாளை 18ஆம் திகதி வவுனியாவிற்கு செல்லவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவருடன் ஜனாதிபதி பிரேமதாசாவின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஜனாதிபதியின் செயலாளர் விஜயதாசா மற்றும் ஆளுநர், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் செல்லவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர்கள் அதிபர்கள் சந்திக்கவும்

தீவுப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்துள்ள சகல ஆசிரியர்களையும் அதிபர்களையும் 19-10-1991 சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு யா/மத்திய கல்லூரியில் சந்திக்குமாறு பிரதி கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கிறார்

## நவாஸ் ஷெரீப் கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

கொழும்பில் அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் 'சார்க்' உச்சிமகாநாட்டில் கலந்து கொள்வதற்காகப் பாகிஸ்தானிய பிரதமர் நவாஸ் ஷெரீப் இலங்கை வருவாரென அறிவிக்கப்பட்டுள்ளது

## மரண அறிவித்தல்

### வடிவேலு ஜெயச்சந்திரன்

பருத்தித்துறை கல்லூரி வீதியைச் சேர்ந்த வடிவேலு ஜெயசந்திரன் அவர்கள் காலமானார். இவர் சந்திரா தேவி, வாமதேவன், பாலசுப்பிரமணியம் (காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குட்டித்தம்பியின் மருமகனும், நாமாணிக்கத்தின் மைத்துனருமாவார். அன்னாரது தகனக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (17-10-91) 10 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை நண்பர்களும், உறவினர்களும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

மொன்றுக்கு) பல்கலைக் கழகக் கல்லூரி விரிவுரையாளர் ரூபா 4500-16x200 - 7700 (மாதமொன்றுக்கு)

மேற் குறித்த தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பின் தகைமையையும் பல்கலைக் கழகத்தில் அல்லது அதையொத்த நிறுவனத்தில் கற்பித்தல்/ஆராய்ச்சியில் மூன்றாண்டு அனுபவத்தையும் பெற்றுள்ள அபேட்சகர்கள் பல்கலைக்கழகக் கல்லூரி விரிவுரையாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

விண்ணப்பதாரி தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த தேதி, வயது, கல்வித் தகைமைகள், அனுபவம், இதர விவரங்கள், தங்களைப் பற்றி விசாரிக்கக் கூடிய இருவரின் பெயர்கள், விலாசங்களை உள்ளடக்கிய விண்ணப்பங்களைப் பல்கலைக் கழகப் பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

இதர பல்கலைக் கழகங்கள், பல்கலைக் கழகக் கல்லூரிகள், அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-10-16

---

பெறும்படியாக இருந்து செயலாற்றும்.

தாயக விடுதலைக்காகப் போராடி வீரமரணமடைந்த 3500 மாவீரர்களின் நினைவாகவும், தமிழீழத் தேசிய தினமாகவும் அனுஷ்டிக்கப்படும். இம் மாவீரர் வாரம் சிறப்புற அமைவதற்காக இதற்குரிய பிரசார வேலைகளும், அரங்குகள் அமைத்தலும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக ஆங்காங்கு இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஓய்வுபெற்ற

ஆவணங்களைச் சேகரிக்க இராணுவம் தடையாக இருப்பதால் முன்னாள் அதிபர்களின் கணக்கு வழக்குகளைச் சமர்ப்பிக்க முடியாதுள்ளதாக புதிய அதிபர்கள் அறிவித்திருப்பதால், இளைப்பாறிய அதிபர்கள் தமது இளைப்பாறுச் சம்பளத்தைப் பெற முடியாது உள்ளதாகப் புகார் தெரிவித்துள்ளனர்.

## இரு பாடசாலை

களிலும் உள்ள மாணவர்களை வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றிவிட்டு தீவகப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வரும் மக்களின் இடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களை செங்குந்தா இந்துக் கல்லூரிக்கும் நல்லூர் விக்னேஸ்வரா பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களை யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்திற்கும் இடம்மாற்றம் செய்யவே முடிவாகியிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (தி)

---

காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வுத் திட்டம் மீளக்குடியமர்த்தும் திட்டம் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதிலேயே இந்த ஸ்தாபனம் அதிகளவு அக்கறையாக இருக்க வேண்டும். ஆனால் சிறிலங்காவில் வன்செயல்களால் பாதிக்கப்பட்டு தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்த மக்களை அகதிமுகாம்களில் வைத்து பராமரிக்க வேண்டிய ஒரு நிலை உருவாகியிருக்கின்றது. அகதிகளைத் தொடர்ந்தும் அகதிகளாக வைத்திருப்பதில் இந்த ஸ்தாபனத்துக்கு அதிகளவு அக்கறை இல்லை.

## ராணுவ நடவடிக்கை தடையாக உள்ளது

சிறிலங்காவில் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகள் இந்த ஸ்தாபனத்தின் புனர்வாழ்வு, மீளக்குடியமர்த்தும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தடங்கல்களை உருவாக்கியுள்ளதைத் தொடர்ந்து இத்திட்டங்கள் யாவும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இங்கு இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதானால் இங்கு இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு அமைதியான சூழ்நிலை தோன்ற வேண்டும் என்று இந்த ஸ்தாபனத்தின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## முதல் முறையாக அகதி முகாம்

சிறிலங்காவில் முதல் முறையாக இந்த ஸ்தாபனம் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மக்களுக்கான அகதிமுகாமை பராமரித்து வருகின்றது மடுவிலும், பேசாலையிலும் உள்ள அகதி முகாம்களில் சுமார் 50,000 மக்களை இந்த ஸ்தாபனம் பராமரித்து வருகின்றது. (க)

---

புங்குடுதீவு, வேலணை, ஆகிய பகுதிகளில் இருந்து நேற்று நள்ளிரவுக்குப் பின்னரும் பண்ணைப்பாலம் வழியாக யாழ் நகரை நோக்கி வந்த மக்கள் நகரின் சட்டங்களின் ஓரங்களில் தங்கியிருந்தனர். (க)

## தீவகத்தின்

கூடல், மண்கும்பான் ஆகிய பகுதிகள் மீது பலமுறை வட்டமிட்ட உலங்கு வானூர்திகள் இடையிடையே கவிழ்த்தாக்குதல்களை மேற்கொண்டன. அத்துடன் சிப்பிளேன் ஒன்றும் தீவகத்தின் கடற்பிராந்தியம் முழுவதும் பல மணி நேரமாக வட்டமிட்டு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது சிறிலங்காபடையினரின் ஷெல் மற்றும் எறிகணைத் தாக்குதல்களும் நேற்றும் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. (22) (ச)

## சிங்கள

இராணுவத்தினரின் சடலங்களைப் புலிகள் கைப்பற்றினர் என்னும் செய்தி கொழும்பில் பரவத் தொடங்கியதை அடுத்து இராணுவத்தினரின் பெற்றோர்கள் தகவல் அறிவதற்காக கொழும்பு சர்வதேச செஞ்சிலுவை சங்க அலுவலகம் நோக்கி பெருமளவில் செல்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கொழும்பு அலுவலகம் புலிகள் கைப்பற்றிய இராணுவத்தினர் (சடலங்கள்) பற்றிய தகவல்களை அறிவதில் முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாகவும் இதன் பொருட்டு புலிகள் வட்டாரங்களுடன் யாழ். கிளையூடாக தொடர்பு கொண்டதாகவும் தெரியவருகின்றது.

---

புச் சகோதரனும், குடும்பத்தினரும் ... நா மாணிக்கத்தின் மைத்துனருமாவார். அன்னாரது தகனக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (17-10-91) 10 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை நண்பர்களும், உறவினர்களும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கல்லூரி வீதி, நா. மாணிக்கம்
பருத்தித்துறை. (R- 1850)

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி.

| வீர ஜனனம் | வீர மரணம் |
|---|---|
| 11 | 02 |
| - | - |
| 10 | 09 |
| - | - |
| 1972 | 1991 |



## வீரவேங்கை கோவிந்தன்

ஓ.. விடுதலை வீரன் கோவிந்தனே ...
தமிழருக்கு அமைதி தர — அமைதியான
இரவில் உதித்த சூரியனே
நேற்று நீ மணலாற்றில் - சுதந்திர
தமிழீழத்திற்காக எம்
சகோதரர்களோடு - ஆயுதம் தொடுத்து
போராடினாய் ஐயா
அன்று மறைந்தது நெஞ்சில் நிலைத்திடும்
நீ எம்மை விட்டு ஏன் பிரிந்தாய்!!
நீ மண்ணைவிட்டு மறையவில்லையடா
மாவீரனே!
உன் பணியை நாம் தொடருவோம்
ஐயா! —

விநாயகபுரம்
திருக்கோயில்,
அப்பாறை

உன்பிரிவை நினைந்து வாடும்
அப்பா, அம்மா சகோதரர்கள்
உறவினர்கள்:

[R/1851]

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மடுந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.